සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා ඌන උපයෝජන
රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும்
கீழுமைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samadhi, Household Economy, Micro Finance, Self Employment, Business
Development and Underutilized State Resources Development

මගේ අංකය / எனது இல / My No: DSD/H0/09/CBO/சுற்றறிக்கை    ඔබේ අංකය / உமது இல / Your No: ........................    දිනය / திகதி / Date: 2021.02.22

சகல,
மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட சமுர்த்தி பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்,
சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சமர்த்தி சமுதாய அடிப்படை மற்றும் பிரதேச அமைப்புத் தலைவர்கள்,
சமுர்த்தி சமதாய அடிப்பவடை வங்கி மற்றும் வங்கிச் சங்கத் தலைவர்கள்.

சமுர்த்தி சுற்றறிக்கை – சமுதாய அடிப்படை /11/2020/02

பிற்சேர்க்கை – 01/2021

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் சமுர்த்திப் பயனாளிகளின் பொருட்டு செயற்படுத்தப்படும் “சமுர்த்தி அருணலு சலுகைக் கடன் வேலைத்திட்டம்”</u>**

**1. அறிமுகம்.**

1.1. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஊடாக அதன் அங்கத்தவர்களுக்காக (சமுர்த்தி பயனாளிகளுக்கு) செயற்படுத்தப்படுகின்ற ‘‘சமுர்த்தி அருணலு சலுகைக்’’ கடன் வேலைத்திடடத்திற்குறியதாக 2020 மார்ச் 16ம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி இலக்கம் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு ‘‘முதலாவது பிறசேர்க்கை’’ என்ற வகையில் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

1.2. இலங்கை அரசாங்கத்தின் ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும்’’ சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கையின் பிரகாரம் கிராமிய மக்கள் முகங்கொடுக்கும் நுண்நிதிக் கடன் **(Micro credit)** பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றினை வழங்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘அருணலு சலுகைக்’’ கடன் வேலைத்திட்டத்திற்கு 2021ம் ஆண்டிற்குள் முன்னுரிமை வழங்கி செற்படுத்தும் பொருட்டு தேவையான ஆலோசனைகளும் வழிகாட்டல்களுக்கும் இப் பிற்வேர்க்கை சுற்றறிக்கை மூலம் வழங்கப்படுகின்றது.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

**2. கடனை வழங்குவதற்குறியதான திருத்தப்பட்ட அடிப்படை விடயங்கள்.**

2.1 நாட்டின ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடங்குகின்ற பிரகாரம் சமுர்த்தி வங்கிக் கட்டுபாட்டுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சமுதாய அடிப்படை அமைப்பிற்கு அதன் அங்கத்தவர்களின் கடன் கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு ரூபா 300000/- (மூன்று இலட்சத்துக்கு) மேற்படாத தொாகையினை “மீள் நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன்” என வழங்குதல்.

2.2 மேலே 2.1 இன் பிரகாரம் மீள் நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடனை விடுவிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி சமுாதாய அடிப்படை அமைப்பினால் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பப்படிவங்களை கவனத்திற் கொண்டு பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம், அல்லது தழுவல் அங்கீகாரத்திற்கு இசைய நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தினடிப்படையில் அங்கத்தவர்களுக்கு ரூபா 10,000 (பத்தாயிரம்) த்திற்கு மேம்படாத தொகையினை கடனாக வழங்குதல்.

2.3 சமுர்த்தி வங்கியால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கு வழங்கப்படுகின்ற கடன் தொகையின் பொருட்டு அந்த அமைப்பினால் சேமிப்புக் கணக்கு ஒன்றினை ஆரம்பித்திருப்பது மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

2.4. மேலே 2.1 இன் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கு வழங்கப்படுகின்ற மீள் நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடனின் பொருட்டு குறிப்பிடப்பட்ட கடன் காப்பீட்டுத் தவணையில் 0.5% த்தினை சமுர்த்தி வங்கியாலும் 0.5 வீதம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.5. சமுர்த்தி அருணலு சலுகைக் கடனைப் பெற்றுக் கொண்ட அங்கத்தவர் ஒருவருக்கு இயற்கைக் காரணம் ஒன்றின் அடிப்படையில் கடனை செலுத்த முடியாமல் போனால் சமுர்த்தி வங்கி நெறிப்படுத்தல் ஆலோசனைகளின் பிரகாரம் சமுர்த்தி வங்கிச் சங்கத்திலிருந்து கடன் காப்பீட்டு நட்டஈட்டினை அடிப்படையாகக் கொண்டு கடனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2.6. சமுர்த்தி வங்கியால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கு வழங்கப்படும் மீள் நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடனின் பொருட்டு குறைந்து செல்லும் மீதியளவினை அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கு ஏழுவீத (7%) வருடாந்த வட்டி அறவிடப்படும்.

2.7 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும். மீள் நிதியிட்டல் மேலதிகப்பற்றும் கடனுக்குறியதாக மாதாந்தம் குறிப்பிட்ட வட்டியினை செலுத்த வேண்டியதுடன் அங்கத்தவர்களால் மீளச் செலுத்தும் கடன் தொகையினை அடிப்படையாகக் கொண்டு சுழற்சியடிப்படையில் விண்ணப்பிக்கின்ற ஏனைய விண்ணப்பதாரிகளுக்கும் கடனை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2.8. அங்கத்தவர்களால் பெற்றுக் கொண்ட அருணலு சலுகைக் கடனை மீளச் செலுத்துவதன் அடிப்படையில் ஒன்று சேரும் நிதியளவு பிறிதொரு அங்கத்தவர் ஒருவருக்கு கடனாக வழங்கும் பொருட்டு பயன்படுத்திக் கொள்ள முடியாவிடின் அவ்வாறு சேருகின்ற தொகையினை சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட மீள் நிதியீட்டல் மேலதிகப்பற்றுக் கடனின் பொருட்டு திருப்பிச் செலுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2.9 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினால் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற 'அருணலு சலுகைக் கடனின்' பொருட்:டு

2.9.1 நாளாந்தம் அல்லது வாராந்தம் கடனை மீளச் செலுத்தும் போது மாதாந்தம நூற்றுக்கு ஒருவீத (1%) நிலையான வட்டியும்.

2.9.2 மாதாந்தம் மீளச் செலுத்தும் போது வருடாந்தம் நூற்றுக்கு பன்னிரெண்டு வீதம் (12%) குறைந்த செல்லும் மீதியின் அடிப்படையில் வட்டி அறவிடப்படல் வேண்டும்.

2.10 சமுர்த்தி வங்கியிலிருந்து கடனைப் பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே செலுத்தாமலுள்ள அறவிடமுடியாக் கடனாளி ஒருவருக்கு ''சமுர்த்தி அருணலு சலுகைக் கடனை'' வழங்கலாகாது என்பதுடன் அறவிடமுடியாக் கடனாளியொருவரின் பினையாளிக்கு கடனை வழங்குவது பொதுச் சபைக் கூட்டத்தின் அங்கீகாரம் அல்லது தழுவல் அங்கீகாரத்திற்குட்பட்டதாக நிறைவேற்றுக் குழுவின் அங்கிகாரத்தின் படி தீர்மாணிக்கப்படல் வேண்டும். அறவிடமுடியாக் கடனாளி ஒருவராக இருந்தாலும், சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கடன்டகளுக்குறியதாக குறிப்பிட்ட தவணைப் பணத்தை செலுத்தி முடித்ததன் பின்னர் சமுர்த்தி அருணலு சலுகைக் கடனைப் பெற்றுக் கொள்ள தகுதியானவராவார்.

2.11 சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கு ''அருணலு சலுகைக் கடன்'' திட்டத்தின் ஊடாக வருடாந்தம் நூற்றுக்கு ஐந்து (5%) வீதத்திற்கு மேற்பட்ட பின்தங்கிய கடன் வட்டிவருமானம் ஒன்று கிடைக்கப்பெறும். அந்த வட்டி வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் பணியின் பொருட்டு பொதுக் கூடடத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட மக்கள் தலைவர் ஒருவர், அங்கத்தவர் ஒருவர் அல்லது அங்கத்தவர் ஒருவரின் பிள்ளையொருவருக்கு பொதுச் சபையில் தீர்மானிக்கின்ற மாதாந்த கொடுப்பனவு ஒன்றினை செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

2.12 அங்கதவர்களின் தேவையின் பிரகாரம் ''சமுர்த்தி அருணலு சலுகைக்கடனை'' வழங்குவதற்குறிய பணிகளை பராமரித்துச்செல்லும் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொதுக்கூட்ட அங்கீகாரத்தினடிப்பபயில் பொருத்தமான இடம் ஒன்றினை தெரிவுசெய்து கொள்ள வேண்டியதுடன் அது அனைவராலும் பிரவேசிக்கக்கூடிய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மக்கள் தலைவர் ஒருவரின் அல்லது அங்கத்தவர் ஒருவரின் வீடாக இருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

**03. சமுர்த்தி அருணலு கடனை வழங்குவதற்குறிய கொடுக்கல் வாங்கல்களை பதியும் முறை.**

3.1 சமுர்த்தி வங்கியால் வழங்கப்படும் அறிவித்தல் கடித்திற்கமைய சமுதாய அடிப்படை அமைப்பின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்ற ''சமுர்த்தி அருணலு மீள் நிதியீட்டல் மேலதிகப்பற்றுக்கடன் தொகை''

வங்கியேடு - வைப்பு நிரல்

சமுர்தி வங்கிக்கு செலுத்த வேண்டிய அருணலு மீள்நிதியீட்டல் மேலதிப் பற்றுப் பக்கம் (பொறுப்புக்கள்) - IIம் நிரல்

3.2 அங்கத்தவர்களுக்கு கடனை வழங்கும் பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்பின் சேமிப்புக் கணக்கிலிந்து பணத்தை திருப்பி எடுத்தல்

வங்கியேடு - பற்று நிரல்

காசேடு - கிடைப்பனவு நிரல்

3.3 கடனைப் பெற்றுக் கொள்ள எதிர்ப்பார்க்கின்ற அங்கத்தவர்கள் மாதாந்த பொதுக்கூட்டத்தில் கோரிக்கையொன்றினை மேற்கொண்டு அதன் பொருட்டு பொதுக் கூட்டத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றிருக்க வேண்டியதுடன் தற்போதைய சுகாதார பாதுகாப்பு நிலையின் கீழ் பொதுக் கூட்டத்தினை கூட்ட முடியாத சந்தரப்பங்களில் பொதுக் கூட்டத்தின் தழுவல் அங்கீகாரத்திற்கு இசைய நிறைவேற்றுக் குழுவின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.4 மேலே 3.3 இன் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்ட அங்கத்தவர்கள் சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் "சமுதாய அடிப்படை /11/2020/02 இன் இணைப்பின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஒன்றினை சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் கிடைக்கின்ற சகல விண்ணப்பப்டிவங்களினதும் விபரங்களை சி.ஆர் புத்தகம் ஒன்றில் ஆவணப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3.5 மேலே 3.4 இன் பிரகாரம் சமர்ப்பித்துள்ள விணப்படிவத்திலும் காசுப் பற்றுச் சீட்டிலும் கையயெழுத்தினைப் பெற்றுக் கொண்டு கடன் தொகையினை உரிய அங்கத்தவருக்கு வழங்கவேண்டியதுடன் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் புத்தகங்களில் பதிதல் வேண்டும். ஒரே தடவையில் பல கடன்களை வழங்குகின்ற சநதர்ப்பத்தில் தாயரித்த உறுதிச்சீட்டுக்கள் பலதை ஒன்றாக இணைத்துத் தயாரித்து ஒரு உறுதிச் சீட்டின் மூலம் மொத்தப் பெறமதியினை பதிய முடியும்.

காசேடு - கொடுப்பனவு நிரல்

அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய அருணலு சலுகைக் கடன் பக்கம் (சொத்துக்கள்) - Iம் நிரல்

3.6 மேலே பந்தி 3.5 இன் பிரகாரம் பதிவுகளை பதியும் போதே அருணலு சலுகைக் கடன் புத்தகம்" என்ற பெயரில் தனியான சீ.ஆர் புத்தகம் ஒன்றில் ஒவ்வொரு கடனாளிகளின் பொருட்டு பக்கம் ஒன்றினை ஆரம்பித்து அதில் கீழ் உள்ள படிவத்திற்கமைய பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

அருணலு சலுகைகக் கடன் புத்தகம் (சொத்துக்கள்)

பக்க இலக்கம் :…………………. பெயர் ……………………. கோவை

இலக்கம் :- அருணலு /……….

| திகதி | மூல ஆவணம் | விபரம் | தலைப்பு | கடன் படுதல் | அறவிடல்கள் | | மீதி (ரூபா) | அங்கத்துவ இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வட்டி | தொகை | | |
| ……… | Cv … | வழங்குதல் | காசு | ………… | | | ……. | ** |
| ………. | R - ….. | தவணைக் கிடைப்பனவு | காசு | | …… | …….. | ……. | ** |

3.7 மேலே 3.5 இன் பிரகாரம் பதிவுகளை மேற்கொள்ளும்போது கடனை வழங்கிய அங்கத்தவருக்கு கீழ் குறிப்பிடப்படும் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட "அங்கத்தவர் கடன் அட்டை ஒன்றினை வழங்குவது அல்லது அங்கதத்வரால் எடுத்து வரப்படும் அப்பியாசப் பத்தகத்தில் பதிவினை மேற்கொள்ள முடியும்.

அங்கத்தவர் கடன் அட்டை

பெயர் :- ………………..

அங்கத்துவ இலக்கம் : …………………

கடன் இலக்கம் : …………………..

ஆண்டு :- …………………..

| மாதமும் திகதியும் | கடன் வகை | கடன்பட்டிருத்தல் | கடனை செலுத்துதல் | | மீதி (ரூபா) | பொருளாளார் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டி | தொகை | | |
| ………….. | அருணலு | … | | | ……….. | ** |
| ………… | | | ………….. | | ……….. | ** |

3.8 நாளாந்தம், வாராந்தம் அல்லது மாதாந்தம் கடனை மீளச் செலுத்தும் போது குறித்த அங்கத்தவர்களுக்கு கடன் தொகையினையும் வட்டியினையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு பற்றுச்சிட்டு ஒன்றினை வழங்கவேண்டியதுடன் அந்த பற்றுச் சீட்டினை அடிப்படையாகக் கொண்டு கீழ் குறிப்பிடப்பட்ட பிரகாரம் புத்தகங்களில் பதிதல் வேண்டும். ஒரே தடவையில் பல கடன்களின் பொருட்டு தவணைப்பணமும் வட்டியும் கிடைக்கும் போது வழங்குகின்ற பற்றுச் சீட்டுக்களின் விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் ஒன்றினைத் தயாரித்து அதன் முழு பெறுமதியினையும் பதிய முடியும்.

காசேடு - கிடைப்பனவு நிரல்

அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய அருணலு சலுகைக் கடன் (சொத்துக்கள்) - IIம் நிரல்

அங்கத்தவர்களிடமிருந்து அறவிட்ட கடன் வட்டி பக்கம் (வருமானம்) – IIம் நிரல்

3.9 மேலே 3.8இன் பிரகாரம் வட்டியுடன் கடனை திருப்பிச் செலுத்தும் போது புத்கங்களில் பதவிடும் போதே மேற்படி 3.6 இன் பிரகாரம் அருணலு சலுகைக் கடன் ஏட்டிலும்'' 3.7 இன் பிரகாரம் அங்கத்தவர் கடன் அட்டையிலும் பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்.

3.10 ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் மேலே 3.6 இன் பிரகாரம் தயாரித்த அருணலு சலுகைக் கடன் ஏட்டின் ஒவ்வொரு பக்கத்தினதும் இறுதி மீதிகளின் பட்டியல் ஒன்றினை தனியாக எடுத்து அதன் கூட்டுத் தொகையினை கொடுக்கல் வாங்கல் பொழிப்பேட்டில் ''அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய அருணலு சலுகைக் கடன்'' பக்கத்தின் மீதியுடன் சமனாகும் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3.11. சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ''அருணலு சலுகைக் கடன்'' தொகையின் பொருட்டு வங்கியால் அறவிடப்படுகின்ற கடன் காப்பீட்டுத் தொகையினை (0.5%) கீழுள்ள பிரகாரம் பதிதல் வேண்டும்.

வங்கியேடு - பற்று நிரல்

கடன் காப்பீட்டுக் கட்டணப் பக்கம் (செலவு) - Iம் நிரல்

3.12 சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ''அருணலு மீள் நிதியீட்டல் மேலதிகப்பற்றுக் கடனை செலுத்தும் போது அத்தொகையினை சமுதாய அடிப்படை அமைப்பின் சேமிப்புக்கணக்கில் வைப்புச் செய்து நிறைவேற்றுக் குழு அங்கீகாரத்தின் பிரகாரம் கௌரவ தலைவரால் உரிய கடன் தொகையினை திருப்பி அறவிட்டுக் கொள்ளுமாறு எழுத்துமூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் கீழுள்ள பிரகாரம் அதனை பதிதல் வேண்டும்.

வங்கியேடு - பற்றுநிரல்

சமுர்த்தி வங்கிக்கு செலுத்த வேண்டிய அருணலு மீள் நிதியீட்டல்

மேலதிக பற்று கடன் பக்கம் (பொறுப்பு) - I ம் நிரல்

3.13 சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகபற்றுக் கடனின் பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்பினால் செலுத்த வேண்டிய மாதாந்த வட்டியினை சேமிப்புக்கணக்கிலிருந்து அறவிட்டுக் கொள்ளுமாறு நிறைவேற்றுக்குழு அங்கீகாரத்தின் பிரகாரம் கௌரவ தலைவரால் ‘‘நிலையான கட்டளை’’ ஒன்றினை எழுத்துமூலம் சமுர்த்தி வங்கிக்கு வழங்கியிருக்க வேண்டியிருக்க வேண்டியதுடன் செலத்திய அந்த வட்டியானது கீழுள்ள பிரகாரம் பதிதல் வேண்டும்.

| | |
|---|---|
| வங்கியேடு | - பற்று நிரல் |
| சமுர்த்தி வங்கிக்கு செலுத்திய கடன் வட்டிப் பக்கம் (செலவு) | - I ம் நிரல் |

3.14 இயற்கை அனர்த்தம் ஒன்றின் அடிப்படையில் எவரேனும் அங்கத்தவர் ஒருவருக்கு கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் போனால் பொதுக் கூட்டத்தின் அங்கிகாரம் அல்லது பொதுக்கூட்டத்தின் தழுவல் அங்கீகாரத்திற்கு இசைய நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த அங்கத்தவர் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றின் மூலம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் கௌரவ தலைவர், கௌரவ செயலாளர், மற்றும் கௌரவ பொருளாளரின் கையொப்பத்துடன் சமுர்த்தி வங்கிக்கு கடன் காப்பீடு நட்டஈட்டின் மூலம் கடன் தொகையினை அறவிட்டுக் கொள்ளுமாறு கோரிக்கையொன்றினை விடுத்தல் வேண்டும்.

3.15 மேலே 3.14 இன் பிரகாரம் சமுர்த்தி வங்கிக்குக் கிடைத்த கோரிக்கைக்கமைய சமுர்த்தி வங்கியால் சமுர்த்தி வங்கிச் சங்கத்தலிருந்து குறித்த நட்ட ஈட்டுத் தொகையினை பெற்றுக் கொள்வதற்கும், அதற்கமைய சமுதாய அடிப்படை அமைப்புக்கு வழங்கிய கடன் மீள்நிதியீட்டல் மேலதிகப் பற்றுக் கடன் தொகையிலிருந்து கழிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3.16 கடன் காப்பீட்டு நட்டஈடு மூலம் சமுர்த்தி வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட மீள்நிதியீட்டல் மேலதிகப்பற்றுக் கடனை கழித்ததாக எழுத்துமூலம் கிடைக்கப்பெற்றதாக பின்னர் கீழுள்ள பிரகாரம் கொடுக்கல் வாங்கல் பொழிப்பேட்டில் பதிதல் வேண்டும்.

சமுர்த்தி வங்கிக்கு செலுத்த வேண்டிய அருணலு மீள்நிதியீட்டல் மேலதிகபற்று கடன் பக்கம் (பொறுப்புக்கள்)- Iம் நிரல்
அங்கத்தவர்களிடமிருந்துகிடைக்க வேண்டிய ‘‘அருணலு’’ சலுகைக் கடன் பக்கம். (சொத்துக்கள்) II ம் நிரல்

3.17 மேலே 3.16 இன் பிரகாரம் பதிவுகளை மேற்கொள்ளும் போதே ‘‘அருணலு சலுகைக் கடன் ஏட்டிலும்’’ அங்கத்தவர் கடன் அட்டையிலும்’’ அறவிட்ட கடன் ஒன்றாக பதிதல் வேண்டும்.

**4. பொதுவான விடயங்கள்**

4.1 25 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரால் சேமிக்கப்பட்ட நிதியின் அடிப்படையில் சமுர்த்தி வங்கியிலும் கட்டியெழுப்பப்பட்ட நிதியங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ‘‘அருணலு சலுகைக் கடன் வேலைத்திட்டம்’’ சமுரத்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஊடாக செயற்படுத்தப்படுவது கிராமிய மக்கள் தற்போது முகங் கொடுத்துள்ள ‘‘நுண்கடன்’’ (Micro Credit) பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றாகும் என்பதனால் அதனைக் குறிக்கோளாகக் கொண்ட விடயங்களின் பொருட்டு மாத்திரம் பயன்படுத்தப்படுத்துவதற்கு சகல சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்களும் விளக்கபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

4.2 இந்த அருணலு சலுகைக் கடன் வேலைத்திட்டத்தின் பிரகாரம் தகவல்களை சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தினால் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற எந்தவொரு

சந்தர்ப்பத்திலும் அத் தகவல்களை வழங்குவதற்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மக்கள் தலைவர்கள் பொறுப்புடன் கடமைப்பட்டுள்ளதனை அறிந்து கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 இந்த அருணலு சலுகைக் கடன் வேலைத்திட்டத்திற்குறியதாக தேவைப்படும் அச்சிடடப்பட்ட காகிதாகிகள் சமுர்த்தி பிரதேச அமைப்பு மட்டத்தில் அச்சிட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பிற்கு விற்பனை செய்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் பிற பிரிவினர்களுக்கு வர்த்தக ரீதியாக அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு எழுதுகருவிகளை விநியோகிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

4.4 இச்சுற்றறிக்கை பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர்த்து சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் "சமுதாய அடிப்படை /11/2020/02" இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களில் மாற்றங்கள் ஏதுமில்லை.

4.5 இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவிப் பொறுப்பு பணிப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

(தொலைபேசி இலக்கம் : - 011 2879773/ 071 4118226 தொலைநகல் 011 2873794)

ஆர் பி.பீ. திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்**

01. செயலாளர் - நிதி அமைச்சு
02. செயலாளர் - சமுர்த்தி மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
    (த.கூ.க .பொ.)
03. பணிப்பாளர் - குறுநிதி
04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
05. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
    (த.கூ.க .பொ.)